கலைஞர் 100 1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 02.12.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வெற்றி நிச்சயம் திட்டத்தின் கீழ் ஒரு மாத கால நுண்ணீர் பாசன தொழில்நுட்ப வல்லுநர் திறன் மேம்பாட்டு பயிற்சி

தமிழ்நாடு அரசு மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் இணைந்து, தமிழ்நாடு இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வழங்கும் திட்டமான "வெற்றி நிச்சயம் திட்டம்" கீழ், ஒரு மாத கால நுண்ணீர் பாசன தொழில்நுட்ப வல்லுநர் திறன் மேம்பாட்டு பயிற்சி வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இந்த பயிற்சி நீர் மற்றும் புவியியல் ஆராய்ச்சி மையம், கோயம்புத்தூர் வளாகத்தில் 25 வேளாண் பட்டதாரிகளை கொண்டு சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.

நுண்ணீர் பாசன தொழில்நுட்பங்களில் வேலைவாய்ப்பு உருவாக்கம், தொழில்துறை தேவைகளை பூர்த்தி செய்யும் தொழில்நுட்ப திறன்களை உருவாக்குதல், மற்றும் இளைஞர்களை நவீன தொழில்துறையில் பணியாற்றக்கூடிய வல்லுநர்களாக மாற்றுதல் இந்த நோக்கத்துடன், TNAU–TN Skill Vetri Nichayam பயிற்சிகள், இளைஞர்களை நடைமுறை அனுபவம் மிக்க தொழில்நுட்ப நிபுணர்களாக உருவாக்குகின்றன. இந்தப் பயிற்சியின் ஒரு முக்கிய அங்கமாக, பயிற்சி பெறும் பட்டதாரிகள் இந்தியாவின் மிகப்பெரிய பம்ப் உற்பத்தி நிறுவனங்களில் ஒன்றான கோயம்புத்தூர் ஆக்வாசப் என்ஜினியரிங் (Aqua Group) தொழிற்சாலைக்கு தொழில்துறை வெளிப்புறப் பயணமாகச் சென்றனர். பம்ப் தொழில்துறையின் சமீபத்திய தொழில்நுட்ப முன்னேற்றங்களை மாணவர்களுக்குப் பகிர்ந்து முக்கிய அறிவூட்டலை வழங்கியது.

பயிற்சியின் போது வழங்கப்பட்ட தொழில்துறை அடிப்படையிலான பயிற்சிகள்:

- நுண்ணீர் பாசனத்திற்கான தகுந்த பம்ப் தேர்வு
- பம்ப் இயக்கம், பராமரிப்பு மற்றும் சரிசெய்தல் (Troubleshooting)
- மின்சார சிக்கனத்திற்கான பம்ப் ஒருங்கிணைப்பு நுட்பங்கள்
- நுண்ணீர் பாசன அமைப்புகளில் பம்புகளின் பயன்பாட்டுத் திறன்கள்

பயிற்சி அமர்வை நிறுவனத்தின் மார்க்கெட்டிங் மேலாளரான திரு. வி. ஏ. சுரேஷ்குமார் ஒருங்கிணைத்தார். மேலும், தொழில்நுட்ப நிபுணர்கள் – திரு. முரளி (தரம்), திரு. யு.வி. ரவி (Unit–4 தலைவர்), திரு. சாஹுல் (டிசைன்), திரு. ராம் பிரசாத் (பயிற்சி அதிகாரி), திரு. கிருஷ்ண

பிரசாத் (டிசைன்) – வழங்கிய நேரடி காட்சிப்பாடங்கள் மற்றும் விளக்கங்கள் மாணவர்களுக்கு தொழில் உலகின் உண்மையான நடைமுறைகளைப் புரியச் செய்தன.

இந்த பயணத்தின் சிறப்பு அம்சமாக, Industry 4.0 தொழில்நுட்பங்களில் அடங்கிய ரோபோடிக்ஸ், தானியக்க உற்பத்தி மற்றும் மேம்பட்ட Quality Control நடைமுறைகளை மாணவர்கள் நேரடியாகக் காணும் வாய்ப்பு கிடைத்தது. இந்த திறன் மேம்பாட்டு திட்டம், நீர் மற்றும் புவியியல் ஆராய்ச்சி மையம் இயக்குநர் முனைவர் எஸ். பழனிவேலன் அவர்களின் வழிகாட்டுதலிலும், பாட ஒருங்கிணைப்பாளர்கள் பேராசிரியர் முனைவர் வீ. ரவிக்குமார் மற்றும் முனைவர் எஸ். செல்வகுமார் அவர்களின் துல்லியமான திட்டமிடலிலும் நடத்தப்பட்டது. பேராசிரியர்கள் பயிற்சி பெறுவோருடன் தொழிற்சாலை பயணத்தில் கலந்து கொண்டு, தொழில் சார்ந்த கற்றல் அனுபவம் ஈர்ப்புடனும் பயனுடனும் அமையச் செய்தனர்.

இந்த தொழில்துறை பயணம், வேளாண் பட்டதாரிகளுக்கு பம்ப் உற்பத்தி துறையின் நவீன தொழில்நுட்ப சூழலை அறிந்துகொள்ளும் முக்கிய வாய்ப்பை வழங்கியது. இதன் மூலம் மாணவர்கள் பாசன தொழில்நுட்ப துறையில் மேலும் தரமான வேலைவாய்ப்புகளைப் பெறுவதற்கான திறனை வளர்த்துக் கொண்டனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**